முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1271

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 09 ம் நாள், 23.03.2023, வியாழக்கிழமை)

23.03.2023, வியாழக்கிழமை

1. ஞானபலம் கொண்ட அரங்கனே
   ஞானிகள் துணைகொண்ட தேசிகனே
   வானவர்கள் மெச்சும் தர்மத்தை
   வாரி வழங்கி உலகமெல்லாம்
2. உலகமெங்கும் பசிபிணி விரட்டி இனிதே
   உயர்வான தர்மபலம் பெருக்கும் அரங்கனே
   தயவாக அரங்கன்நீ செய்துவரும் தர்மமே
   தரணியை காத்து வழிநடத்தும்
3. வழிநடத்தும் உன்தொண்டர்படை மூலமாக
   வையகம் முழுமைகண்டு இனிதே
   அழியாமை பெற்று உலகோரெல்லாம்
   ஆற்றல்பட அரங்கன்உன்வழி ஞானிகளாகக்கூடும்
4. கூடவே அரங்கன் உன்உபதேசம்
   குவலயத்தில் மக்களை மாற்றும் சக்தியாக இருக்க
   நாடெங்கிலும் உன்கொள்கையும் தர்மமும்
   ஞானமாக மக்களிடை பரவ
5. பரவவே இந்த கலியுகம் இடர்மாறி பழுதில்லா ஞானயுகமாக மாற்றங்காணும்
   தடையற எங்கும் தர்மபலம் பெருகி தவராஜன் உன்தூண்டலில் இனிதே
   இனிதே உலகமெல்லாம் ஞானவான்கள் தலைமையாக
   இணையில்லாத ஞான ஆட்சியாக உருவாகக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—